## 1. பக்தர்களுக்கு புதிய குடிநீர் திட்டம்

திண்டுக்கல் மாவட்டம், பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் குடிநீர் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யும் விதமாக திருக்கோயில் நிதியிலிருந்து ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் சுமார் 9 கி.மீ. தொலைவிலுள்ள பாலாறு மற்றும் பொருந்தலாற்று படுகையில் நீரேற்றம் செய்து கொண்டு வரப்படும். இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல்படுத்தப்படும்.

மதுரை மாவட்டம், அழகர்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் குடிநீர் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு திருக்கோயிலிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ள கள்ளந்திரி கிராமத்தில் 4 ஆழ்துளைக்கிணறுகள் அமைத்து, திருக்கோயில் வளாகத்தில் 2 கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மற்றும் 2 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் அமைத்து குடிநீர் கொண்டு வரப்படும். திருக்கோயில் நிதியிலிருந்து ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 2. பக்தர்கள் தரிசன வரிசை வளாகம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 13 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து பல்வேறு வசதிகளுடன் பக்தர்கள் இருக்கையில் காத்திருந்து வரிசையில் தரிசனம் செய்ய நவீன வளாகம் அமைக்கப்படும்.

## 3. திருக்கோயில்கள் புனரமைப்பு

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 4 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், அன்னமங்கலம், அருள்மிகு ஆதீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 1 கோடியே 43 இலட்சம் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், தையூர், அருள்மிகு தடுத்தாண்டநாதர் திருக்கோயிலில் ரூபாய் 18 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம், அருள்மிகு மாமருதீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 4 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி அருள்மிகு காந்திமதி அம்மன் உடனுறை அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயிலில் ரூபாய் 1 கோடியே 13 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், பண்பொழி, அருள்மிகு நகரீஸ்வரமுடையார் திருக்கோயிலில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், சொக்கம்பட்டி, அருள்மிகு காசிவிஸ்வநாதர் திருக்கோயிலில் ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டம்,

எரப்பாவூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 6 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், சேலம் அருள்மிகு சுகவனேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 73 இலட்சத்து 75 ஆயிரம் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், ஆறகளூர், அருள்மிகு காமநாதீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 31 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டிலும், நாமக்கல் மாவட்டம், கூவமலை, அருள்மிகு பழனிஆண்டவர் திருக்கோயிலில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், பத்தரசக்கோட்டை, அருள்மிகு வாலீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி, அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், திருப்பூர் மாவட்டம், மஜரா அல்லாளபுரம், அருள்மிகு உலகேஸ்வரர் மற்றும் உண்ணாமலை அம்மன் திருக்கோயிலில் ரூபாய் 6 இலட்சத்து 68 ஆயிரம் மதிப்பீட்டிலும், நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம், அருள்மிகு லட்சுமிநாராயணப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டிலும், வேலூர் மாவட்டம், வாழைப்பந்தல், அருள்மிகு பக்தவச்சலேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 39 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், மாமண்டூர், அருள்மிகு சோமநாதீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், ராட்டினமங்கலம், அருள்மிகு ராதா மாதவப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 21 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டிலும், ஆக பதினெட்டு திருக்கோயில்களில் ரூபாய் 10 கோடியே 68 இலட்சத்து 78 ஆயிரம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி மூலம் திருப்பணிகள் மேற்கொண்டு புனரமைக்கப்படும்.

**4. அன்னதானக்கூடங்கள்**

திருப்பூர் மாவட்டம், அவிநாசி, அருள்மிகு அவிநாசிலிங்கேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம், சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம், பரக்கலக்கோட்டை, அருள்மிகு மத்தியபுரீஸ்வர சுவாமி திருக்கோயிலில் ரூபாய் 55 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், மேலவீரராகவபுரம், அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 54 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் மாவட்டம், திருக்கடையூர், அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 54 இலட்சம் மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம், திருக்கருகாவூர், அருள்மிகு முல்லைவனநாதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 52 இலட்சம் மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம், சூரக்கோட்டை, அருள்மிகு பரமநாத அய்யனார் திருக்கோயிலில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருப்பைஞ்ஞீலி, அருள்மிகு

ஸ்ரீலிவனேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 51 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆக 8 திருக்கோயில்களில், ரூ.4 கோடியே 26 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய அன்னதானக்கூடங்கள் திருக்கோயில் நிதியில் கட்டப்படும்.

**5. திருமண மண்டபங்கள்**

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி, அருள்மிகு புத்திரகாமேஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம், அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 1 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 36 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆக மூன்று திருக்கோயில்களில் பக்தர்கள் வசதிக்கென ரூபாய் 3 கோடியே 96 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியில் திருமண மண்டபங்கள் கட்டப்படும்.

**6. திருத்தேர்கள் புனரமைத்து புதுப்பித்தல்**

திருவாரூர் மாவட்டம், ஸ்ரீவாஞ்சியம் அருள்மிகு வாஞ்சிநாதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும், பெரம்பலூர் மாவட்டம், எளம்பலூர் அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் மற்றும் திருமங்கலியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டிலும், கடலூர் மாவட்டம், டி.கோபுராபுரம் அருள்மிகு ஆதிசக்தீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், மேட்டூர் அருள்மிகு பெரியபத்திரகாளியம்மன் மற்றும் பெரிய மாரியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், பூதமங்கலம், அருள்மிகு ஆதிகேசவப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 30 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி, அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 31 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டிலும் ஆக ஆறு திருக்கோயில்களில் ரூபாய் 1 கோடியே 61 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதி மூலம் 7 திருத்தேர்கள் புனரமைக்கப்படும்.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம், அருள்மிகு குழந்தைவேலாயுதசுவாமி திருக்கோயிலில் உள்ள இரு தேர்களுக்கு ரூபாய் 3 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியில் இரும்பு சக்கரங்கள் பொருத்தப்படும்.

**7. சேவார்த்திகளுக்கு அடிப்படை வசதிகள்**

திருநெல்வேலி மாவட்டம், பண்பொழி, அருள்மிகு திருமலைக்குமாரசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 44 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டிலும், புதுக்கோட்டை மாவட்டம்,

ஆவுடையார்கோயில், அருள்மிகு பாம்பணி அம்மன் திருக்கோயிலில் ரூபாய் 12 இலட்சம் மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினம் அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோயிலில் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், மண்டைக்காடு, அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும், தருமபுரி மாவட்டம், தீர்த்தமலை, அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 30 இலட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டத் திருக்கோயில்களின் தொகுப்பு கோயிலான திருநெல்வேலி மாவட்டம், இலத்தூர், அருள்மிகு மதுநாதசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆக 6 திருக்கோயில்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் கழிப்பறைகள், குளியலறைகள் ரூபாய் 1 கோடியே 52 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியில் கட்டப்படும்.

**8. உலோகத் திருமேனி பாதுகாப்பு மையம்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவானைக்காவல், அருள்மிகு ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி திருக்கோயிலில், திருச்சி மண்டல திருக்கோயில்களில் உள்ள உலோக திருமேனிகளை பாதுகாத்து வைத்திட ஏதுவாக ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் உலோகத் திருமேனி பாதுகாப்பு மையம் கூடுதலாக கட்டப்படும்.

**9. திருக்கோயில்களில் புதிய இராஜகோபுரம் அமைத்தல்**

திருப்பூர் மாவட்டம், கொங்கணகிரி, அருள்மிகு கந்தப் பெருமான் திருக்கோயிலில் ரூபாய் 32 இலட்சம் மதிப்பீட்டிலும், கோயமுத்தூர் மாவட்டம், காங்கேயம்பாளையம், அருள்மிகு செல்லாண்டியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 99 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆக இரண்டு திருக்கோயில்களில் ரூபாய் 1 கோடியே 31 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர்கள் மூலம் புதியதாக ஐந்து நிலை இராஜகோபுரங்கள் கட்டப்படும்.

**10. திருக்குளத்திருப்பணி**

வேலூர் மாவட்டம், சோளிங்கர், அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலின் தக்கார் குளம் ரூபாய் 23 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டிலும், காஞ்சிபுரம் மாவட்டம், மானம்மதி, அருள்மிகு சோழியம்மன் திருக்கோயில் பெரிய திருக்குளம் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டம், பசுவந்தனை, அருள்மிகு ஆதிகைலாசநாதர் திருக்கோயிலில் ரூபாய் 34 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், வெண்குன்றம், அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில் திருக்குளம் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், எலத்தூர் மோட்டூர், அருள்மிகு சிவசுப்ரமணியசுவாமி திருக்கோயிலின் இரண்டு திருக்குளங்கள் ரூபாய் 10 இலட்சம்

மதிப்பீட்டிலும், ஆக ஐந்து திருக்கோயில்களின் 6 திருக்குளங்கள் ரூபாய் 1 கோடியே 12 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியில் செப்பனிடப்படும்.

## 11. வணிக வளாகங்கள்

வேலூர் மாவட்டம், இரத்தினகிரி, அருள்மிகு பாலமுருகன் திருக்கோயிலில் ரூபாய் 32 இலட்சம் மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம், அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 71 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டிலும், ஆக இரு திருக்கோயில்களில் வணிக வளாகங்கள் ரூபாய் 1 கோடியே 3 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

## 12. தீர்த்தமாடும் பெண் பக்தர்களுக்கு நவீன உடை மாற்றும் அறைகள் கட்டுமானம்

தமிழ்நாட்டில் முக்கிய திருக்கோயில்களின் அருவிகள் மற்றும் நீர்நிலைகளில் பக்தர்கள் தீர்த்தமாடிவிட்டு பின் இறைவழிபாடு செய்யும் வழக்கம் நடைமுறையில் உள்ளது. அத்தகைய அருவிகள் மற்றும் நீர்நிலைகளில் தீர்த்தமாடும் பெண் பக்தர்கள் உடைமாற்ற ஏதுவாக திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம், அருள்மிகு திருக்குற்றாலநாதர் திருக்கோயிலில் ரூபாய் 18 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், திற்பரப்பு, அருள்மிகு மகாதேவர் திருக்கோயிலில் ரூபாய் 18 இலட்சம் மதிப்பீட்டிலும், தருமபுரி மாவட்டம், தீர்த்தகிரிமலை, அருள்மிகு தீர்த்தகிரீஸ்வரர் திருக்கோயிலில் ரூபாய் 18 இலட்சம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் மாவட்டம், திருவெண்காடு, அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயிலில் ரூபாய் 18 இலட்சம் மதிப்பீட்டிலும்,

60.மதுரை மாவட்டம், அழகர்கோயில், அருள்மிகு ராக்காயி அம்மன் திருக்கோயிலில் ரூபாய் 18 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக 5 திருக்கோயில்களில் நவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய நவீன உடை மாற்றும் அறைகள் ரூபாய் 90 இலட்சம் செலவில் திருக்கோயில் நிதியில் கட்டப்படும்.

## 13. முகப்பு மண்டபங்கள்

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அருள்மிகு நாடியம்மன் திருக்கோயிலில் ரூபாய் 49 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், இடிந்தகரை, அருள்மிகு சித்திவிநாயகர் திருக்கோயிலில் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும் ஆக இரு திருக்கோயில்களில் ரூபாய் 89 இலட்சம் மதிப்பீட்டில் முகப்பு மண்டபங்கள் திருக்கோயில் நிதியிலிருந்து கட்டப்படும்.

**14. கல்வி நிறுவனங்களில் அடிப்படை வசதிகள்**

நாகப்பட்டினம் மாவட்டம், மேலையூர், பூம்புகார் கலைக்கல்லூரியில் (தன்னாட்சி) மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்கான இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் ரூபாய் 34 இலட்சம் மதிப்பீட்டில் கல்லூரி மேம்பாட்டு நிதியிலிருந்து அமைக்கப்படும். திருநெல்வேலி மாவட்டம், குற்றாலம், ஸ்ரீபராசக்தி வித்யாலயா சி.பி.எஸ்.இ. பள்ளியில் ரூபாய் 11 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளி மேம்பாட்டு நிதியிலிருந்து அடிப்படை வசதிகள் அமைக்கப்படும்.

**15. மண்சாலையை தார் சாலையாக மாற்றுதல்**

விழுப்புரம் மாவட்டம், மயிலம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் மலைவழி மண் பாதை ரூபாய் 33 இலட்சம் மதிப்பீட்டில் சிவஞான பாலய சுவாமிகள் திருமட நிதியைக் கொண்டு தார் சாலையாக மாற்றப்படும்.

**16. பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் சாயரட்சை பூஜைக்கு வரும் பக்தர்களுக்கு பஞ்சாமிர்தம் வழங்கும் திட்டம் விரிவாக்கம்**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் சாயரட்சை பூஜைக்கு வரும் பக்தர்களில் 2000 பேருக்கு தொன்னையில் பஞ்சாமிர்தம் வழங்க மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இந்த அறிவிப்பு நடைமுறைப்படுத்தியவுடன் பக்தர்களிடமிருந்து மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளதால் சாயரட்சை பூஜை சமயம் வருகை புரியும் அனைத்து பக்தர்களுக்கும் பஞ்சாமிர்த பிரசாதம் வழங்கும் வகையில் கூடுதலாக ரூபாய் 10 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் திருக்கோயில் நிதியிலிருந்து இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**17. திருக்கோயில்களுக்கு சுற்றுச்சுவர் அமைத்தல்**

திருவண்ணாமலை மாவட்டம், மருத்துவம்பாடி, அருள்மிகு சீதா பட்டாபிராமர் திருக்கோயிலில் ரூபாய் 8 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், பண்பொழி, அருள்மிகு சுந்தரராஜப்பெருமாள் திருக்கோயிலில் ரூபாய் 1 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டிலும் ஆக இரு திருக்கோயில்களுக்கு சுற்றுச்சுவர் ரூபாய் 9 இலட்சத்து 25 ஆயிரம் மதிப்பீட்டில் துறை நிதியில் கட்டப்படும்.